# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 152/2025 | Date | : 02.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.5 | Taluk | : |
| Name | : திரு. பெரியசாமி | Calling | : |
| Father / Husband Name | : கந்தசாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.02.2026.

**(எதிரிகள் 1 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்.)**

**முதல் விசாரணை :**

1. நான் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், நடுவனேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஜவுளி கடை வைத்துள்ளேன். அ.சா.1 ரஞ்சித்குமார் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்பாக இரவு 07.30 மணியளவில் தகராறு நடந்ததாக கேள்விபட்டேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 08.01.2022 ம் தேதி இரவு 11.30 மணியளவில் அ.சா.1 னிடம் ஆஜர் எதிரிகள் அனைவரும் அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து கெட்ட வார்த்தையால் பேசியதாகவும், கதவை உடைத்து அடித்து கொலை

மிரட்டல் விடுத்ததாகவும், கத்தியால் கையில் கிழித்து காயத்தை ஏற்படுத்தியதையும், காலால் எட்டி உதைத்ததையும், அடித்ததை நேரில் பார்த்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கபட்டது.

<u>மறுவிசாரணை:–</u> இல்லை.

Witness- Sd/- Periyasamy

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 152/2025 | Date | : 02.02.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.6** | Taluk | : |
| Name | : **திரு. முரளி** | Calling | : |
| Father / Husband Name | : **கோபால்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.02.2026.

**(எதிரிகள் 1 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்.)**

**முதல் விசாரணை :**

1. நான் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், நடுவனேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். தறி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் (2) உள்ள முதலாவது கையெழுத்தும், இரண்டு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்தும் என்னுடையது தான் **(மேற்படி கையெழுத்துகள் அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 4 வருடங்களுக்கு முன்பாக போலிசார் என்னிடம் நான்கு தாள்களில் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். எதற்கு என்று எனக்கு தெரியவில்லை. என்னுடன் கையொப்பம் போட்டது யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 10.01.2022 ம் தேதி காலை 10.00 மணிக்கு ஏழுமாத்தானூர் பஸ் நிறுத்தம் அருகே எதிரி ஐனேஸ் மற்றும் கோகுல்ராஜ் ஆகியோர்களை கைது செய்து மேற்படி இரண்டு எதிரிகளிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 08.01.2022 ம் தேதி நடந்த சம்பவத்தில் பயன்படுத்திய கத்தி மற்றும் TN 52 M 4383 Honda dio இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு ஆதரவாக கையொப்பம் எதற்காக போட்டேன் என்று தெரியவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கபட்டது.

**மறுவிசாரணை:–** இல்லை.

Witness- Sd/- Murali

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.